**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 - 2014**

**HIGHER MOTHER TONGUE – COMPOSITION**

**PRIMARY 6 HMT**

PAPER 1

<u>நான் செய்த ஒரு நற்செயல்</u> என்ற தலைப்பில் 120 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்:

- எப்போது, எங்கே, ஏன் அந்த நற்செயலைச் செய்தாய் ?
- யாருக்கு அந்த நற்செயலைச் செய்தாய் ?
- நற்செயலால் ஏற்பட்ட நன்மை என்ன ?
- உன் மனநிலை எப்படி இருந்தது ?



MORE FREE TESTPAPERS AVAILABLE AT WWW.TESTPAPERSFREE.COM.

## ‘அ’ பிரிவு

### A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

ஒரு குதிரை வண்டிக்காரன் வாடகைக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு அயல் ஊருக்குப் புறப்பட்டான். குதிரை மிக மெதுவாக நடந்தது. வண்டிக்காரன் சாட்டையால் (Q1)ஒரு தடவைகள் அடித்தும் குதிரை ஓடவில்லை. வண்டியில் இருந்தவர்கள் உட்கார்ந்தபடியே (Q2)தூங்கினான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் சரக்குந்து, வைக்கோல் ஏற்றிக்கொண்டு வந்தது. சிறிது நேரத்தில் அது குதிரையைக் கடந்து (Q3)சென்றான். குதிரை சரக்குந்திலிருந்த வைக்கோலைக் கண்டதும் அதைத் (Q4)தின்ற நாலுகால் பாய்ச்சலில் ஓடியது. வண்டியில் இருந்தவர்கள் (Q5)விளித்துக்கொண்டனர். அடிவாங்கியபோது ஓட மறுத்த குதிரை வைக்கோலைக் கண்டதும் வேகமாக ஓடியதை எண்ணி வண்டிக்காரன் சிரித்தான்.

| | |
|---|---|
| (Q1) | |
| (Q2) | |
| (Q3) | |
| (Q4) | |
| (Q5) | |

## A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

(Q6) ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்வதால் உடல் உரம் பெறுகிறது.

நம் உடல் உரம் பெறுவதற்கு நாம் ஒவ்வொரு நாளும்

________________________________________

________________________________________

(Q7) இளையர் மன்ற உறுப்பினர்களால் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இளையர் மன்ற உறுப்பினர்கள் பல நிகழ்ச்சிகளை____________

________________________________________

(Q8) சான்றோர்களின் நல்லுரைகளைக் கேட்டு நடப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவர்.

சான்றோர்களின் நல்லுரைகளைக் கேட்டு நடக்காதவர்கள்

________________________________________

________________________________________

(Q9) சிற்பி தன் கைவண்ணத்தில் எழில்மிக்க சிலை ஒன்றை உருவாக்கினார்.

சிற்பியின் கைவண்ணத்தில் எழில்மிக்க சிலை____________

________________________________________

A3 <u>வேற்றுமை உருபுகள்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

பள்ளி விடுமுறை தொடங்கியது. தீபன் (Q10)____________________ (மலேசியா) சென்றான். அவன் அங்கு வசிக்கும் தன் மாமாவின் வீட்டில் சில நாள்கள் தங்கினான். ஒரு நாள், அவன் (Q11)____________________ (கூடம்) புத்தகம் படித்துக்கொண்டு இருந்தான். அப்போது திடீரென்று ஏதோ ஓசை கேட்டது. அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பாம்பு ஒன்று அவன் அருகில் ஊர்ந்து வந்தது. உடனே, அவன் அலறிக்கொண்டு அங்கே இருந்த (Q12)____________________ (நாற்காலி) மீது ஏறிக்கொண்டான். அது அருகில் வந்ததும் திடீரென்று நின்றது. அந்த நேரம் கதவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டிருந்த (Q13)____________________ (அவன்) நண்பன் வெளியே வந்தான். இது நண்பனின் விளையாட்டு என்பதைத் தீபன் அப்போதுதான் உணர்ந்தான்.

'ஆ' பிரிவு

**B4** <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

வடிவழகன் சிற்பக்கலையில் ஈடுபாடு உடையவன். அன்று சிற்பக் கண்காட்சி ஒன்றுக்குச் சென்றுவிட்டு அவன் வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அவனுடைய எண்ணமெல்லாம் வீட்டில் காத்திருக்கும் அன்னையைச் சுற்றியே இருந்தன. (Q14)____________________. அதனால், அவன் தன் நடையைத் துரிதப்படுத்தினான். திடீரென்று எங்கிருந்தோ வந்த படபடவென்ற சத்தம் அவன் காதைத் துளைத்தது. (Q15)____________________. தூரத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் காற்றைக் கிழித்துக் கொண்டு படு வேகத்தில் வந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். (Q16)____________________. அதன் விளக்கொளி அவன் கண்களைக் கூசச் செய்தது. அந்தச் சத்தமும் மிக அருகில் ஒலித்தது. மறுகணம் வடிவழகன் தூரத்தில் போய் விழுந்தான். (Q17)____________________. அவன் மயக்கம் தெளிந்து கண்விழித்தபோதுதான் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தான்.

1) அந்தச் சத்தத்தில் அவனுடைய கவனமும் சிதைந்தது.

2) நினைவிழந்த நிலையில் கிடந்த அவனுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

3) அன்னையின் பொறுமையைச் சோதிக்க அவன் எண்ணியிருந்தான்.

4) உடனே பாதையை விட்டு விலகி ஓரமாக நடக்கத் தொடங்கினான்.

5) தாயாரை நெடுநேரம் காக்க வைக்க அவன் விரும்பவில்லை.

6) அவன் ஓரமாக ஒதுங்குவதற்குள் மோட்டார் சைக்கிள் அவனை நெருங்கியது.

7) அந்தச் சத்தத்தைக் கேட்டதும் அவன் சிலையாய் நின்றான்.

8) விழுந்துகிடந்த அவனை வழிப்போக்கர் மருத்துவமனையில் சேர்த்தார்.

| வினா எண் | விடை |
|---|---|
| (Q14) | |
| (Q15) | |
| (Q16) | |
| (Q17) | |

‘இ’ பிரிவு

C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

பாரதிதாசனார் புதுவையில், 1891-ஆம் ஆண்டு, பதினேழாம் நாள் பிறந்தார். அவருடைய தகப்பனாருடைய பெயர் கனகசபை முதலியார்; தாயாருடைய பெயர் பழனியம்மாள். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் கனகசுப்புரத்தினம். அவரின் பள்ளிப்படிப்புப் புதுச்சேரியில் தொடங்கியது.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப அவர் சிறு வயதிலேயே தமிழில் அதிக <u>ஆர்வம்</u> காட்டினார். ஆகையால், அவர் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்தார். அவர் புதுவை பிரெஞ்சு அரசாங்கத்தில் சுமார் முப்பது ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

அச்சமயம் அவருக்கு அதிகத் தொல்லைகள் கொடுத்தவாறே இருந்தார் துரைசாமி என்கிற மற்றொரு தமிழாசிரியர். இவரது தொல்லைகளைப் பாரதிதாசன் பொருட்படுத்தவில்லை. ‘பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது’ என்பதற்கேற்ப அவர் பயமின்றி இருந்தார்.

பாரதிதாசனின் தோற்றம் கம்பீரமானது. அகன்ற நெற்றியுடனும் மிடுக்கான மீசையுடனும் நேர்கொண்ட பார்வையுடனும் அவர் எடுப்பான தோற்றமுடையவராய்த் திகழ்ந்தார். மேலும் நிமிர்ந்த நடை கொண்டவராகவும் அஞ்சா நெஞ்சம் உடையவராகவும் அவர் விளங்கினார்.

அவர் தமிழரிடையே தமிழுணர்ச்சியைத் தட்டி எழுப்பத் தன் பாடல் திறனைப் பயன்படுத்தினார். தன் உணர்ச்சிகளை எழுத்து வடிவில் சித்தரிப்பதில் அவர் வல்லவர். தமிழர்களின் தமிழுணர்ச்சியைத் தூண்டப் பல பாடல்களைப் பாடியது மட்டுமல்லாது பல நல்ல கருத்துகளையும் கதைகளையும் எழுதியுள்ளார்.

கனக சுப்புரத்தினம் பாரதியார்மேல் அதிகப் பற்று வைத்திருந்ததால் தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். அவர் பாரதியார் போலவே மக்களிடம் தமிழ்ப்பற்றை ஏற்படுத்த பாடுபட்டார்.

அவர் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்தொன்பதாம் நாள் இவ்வுலகை விட்டு நீங்கினார். அவர் மறைந்தாலும் அவருடைய பாடல்களும் கதைநூல்களும் அவரை நமக்கு நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

தமிழராகப் பிறந்ததைப் பெருமையாகக் கருதி தமிழுக்காகவே உழைத்தவர் அவர். அவரைப் போலவே நாமும் தமிழை நம் உயிரினும் மேலாகப் போற்றிக் காத்துவந்தால் தமிழறிஞர்களின் பெருமை நெடுங்காலம் கட்டிக்காக்கப்படும் என்பது உறுதி.

**வினாக்கள்:**

(Q18) பாரதிதாசன் தமிழாசிரியராகப் பணிபுரியக் காரணம் என்ன?

(3 மதிப்பெண்கள்)

___

___

___

(Q19) பாரதிதாசனார் முதன்முதலில் எங்கே தம் பணியைத் தொடங்கினார்?

(3 மதிப்பெண்கள்)

___

___

___

(Q20) பாரதிதாசன் எப்படிப்பட்ட தோற்றம் கொண்டவர்? (4 மதிப்பெண்கள்)

___

___

___

(Q21) அவர் தமிழர்களின் தமிழார்வத்தை எப்படி வளர்த்தார்?

(3 மதிப்பெண்கள்)

(Q22) அவர் ஏன் தன் பெயரைப் பாரதிதாசனார் என்று வைத்துக்கொண்டார்?

(4 மதிப்பெண்கள்)

(Q23) பாரதிதாசனை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருப்பவை எவை?

(4 மதிப்பெண்கள்)

(Q24) பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

அ. ஆர்வம் - 

ஆ. பாடுபட்டார் - 

முற்றும்

**P6 HMT**
**TESTPAPER 2**

## ANSWER KEY

(Q1) பல
(Q2) தூங்கினார்கள்
(Q3) சென்றது
(Q4) தின்ன
(Q5) விழித்துக்கொண்டனர்

(Q6) உடற்பயிற்சி செய்ய வேண்டும்
(Q7) ஏற்பாடு செய்துள்ளார்கள்
(Q8) வாழ்க்கையில் வெற்றி பெறமாட்டார்கள்
(Q9) ஒன்று உருவாக்கப்பட்டது

(Q10) மலேசியாவுக்கு
(Q11) கூடத்தில்
(Q12) நாற்காலியின்
(Q13) அவனுடைய

(Q14) 5
(Q15) 1
(Q16) 4
(Q17) 2

(Q18) சிறு வயதிலேயே தமிழில் அதிக ஆர்வம் காட்டியதும் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்ததுமே பாரதிதாசன் தமிழாசிரியராக பணிபுரியக் காரணமாகும்.

(Q19) பாரதிதாசனார் முதன்முதலில் தம் பணியைப் புதுவை பிரெஞ்சு அரசாங்கத்தில் தொடங்கினார்.

(Q20) பாரதிதாசன் அகன்ற நெற்றியும் மிடுக்கான மீசையும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் கொண்ட கம்பீரமான, எடுப்பான தோற்றமுடையவர்.

(Q21) அவர் பல பாடல்களைப் பாடியது மட்டுமல்லாது பல நல்ல கருத்துகளையும் கதைகளையும் எழுதித் தமிழர்களின் தமிழார்வத்தை வளர்த்தார்.

(Q22) அவர் பாரதியார்மேல் அதிகப் பற்று வைத்திருந்ததால் தன் பெயரைப் பாரதிதாசனார் என்று வைத்துக்கொண்டார்.

(Q21) பாரதிதாசனை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருப்பவை அவருடைய பாடல்களும் கதைநூல்களும் ஆகும்.

(Q24)அ. ஈடுபாடு

ஆ. தட்டியெழுப்ப